# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


<u>ஆணை நாள் 01.07.2026</u>

<u>முன்னிலை</u>

**திரு.அ.விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

## <u>வழக்கு எண். SA 4751/B/2024</u>

திரு.R.அசோக் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
நிர்வாக அலுவலர்,
மண்டலம் - 4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625001. — பொது அதிகார அமைப்பு

**<u>கோரிய தகவல்:</u>** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 08.12.2023 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில், 24.05.2023, 19.10.2023 தேதியிட்ட தனது புகார் மனுக்கள் குறித்த தகவல்கள், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை தகவலாக வழங்க கோரி மொத்தம் 10 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 09.04.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.R.அசோக் அவர்கள் இன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. (தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது). |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.சிவகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம் - 4, மதுரை நகராட்சி, மதுரை மாவட்டம் அவர்கள் ஆஜரானார். |

## ஆணை

1. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு கடித எண். B3/005937/2023 நாள்.26.12.2023, கடித எண். Z4B3/005937/2023 நாள்.24.01.2024 வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாக தெரிவித்து, அதற்குண்டான ஆவண நகல்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். மேல்முறையீட்டாளர் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜராகி அவர்தம் கருத்தை எடுத்துரைக்கத் தவறியுள்ளார்.

**2.** எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்க்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

**ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில், மேல்முறையீட்டாளருக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களே போதுமானதாக இவ்வாணையம் கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.**

**ஓம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4751/B/2024</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
நிர்வாக அலுவலர்,
மண்டலம் - 4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625001.

**<u>மேல்முறையீட்டாளர்:</u>**
திரு.R.அசோக்,
36, வடுகதட்டார சந்து,
கீழமாசி வீதி,
மதுரை மாவட்டம் - 625001.

Copy to : File
AK/PC